செய்தி வெளியீடு எண்: 092 நாள்: 04.02.2019

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.2.2019) தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சார்பில் '102' தாய் சேய் நல வாகன சேவைக்காக 1 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 15 புதிய வாகனங்களின் சேவையை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். மேலும், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்ட 72 யோகா மற்றும் இயற்கை மருத்துவ உதவி மருத்துவர்கள் / விரிவுரையாளர்கள் நிலை–II பணிக்கான பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் தாய்மார்கள் மற்றும் சேய்களை அவர்கள் இல்லத்திற்கு பாதுகாப்பாக அழைத்து செல்லவும், ஒரு வயதிற்குட்பட்ட உடல்நலம் குன்றிய குழந்தைகளை, சிகிச்சை முடிவடைந்த பிறகு அல்லது தடுப்பூசி அளிக்கப்பட்ட பின்பு, குழந்தைகள் மற்றும் தாய்மார்களை அவர்கள் இல்லத்திற்கு அழைத்து செல்லவும், அரசு மருத்துவமனைகளில் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்பவர்களை அவர்களின் இல்லத்திற்கு அழைத்து செல்லவும், '102' தாய் சேய் நல வாகன சேவைத் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2013–ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தில் தற்போது 146 வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. மேலும், இத்திட்டத்தின் மூலம் இதுவரை அரசு மருத்துவமனைகளில் பிரசவித்த 3,95,205 தாய்மார்கள் பயனடைந்துள்ளனர்.

இத்தகைய உயரிய '102' தாய் சேய் நல வாகன சேவையை மேம்படுத்தும் வகையில், 1 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மேலும் 15 புதிய '102' தாய் சேய் நல வாகனங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் மற்றும் அவ்வப்போது புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்பும் பொருட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையின் பேரில், இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் சுகாதாரத் துறைக்கென தனியாக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தின் மூலமாக இதுவரை 10,931 மருத்துவர்கள், 9,533 செவிலியர்கள் மற்றும் 4,200 மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக தற்போது புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள 72 யோகா மற்றும் இயற்கை மருத்துவ உதவி மருத்துவ

அலுவலர்கள் / விரிவுரையாளர் நிலை–II பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

தாம்பரம் அரசு மருத்துவமனையில் பணியின்போது ஏற்பட்ட விபத்தில் ஒரு கண்ணில் பார்வையிழந்த செவிலியர் திருமதி டி. பால்செல்வி அவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று வழங்கினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் பகுதியைச் சேர்ந்த மின் விபத்தில் இரண்டு கைகளை இழந்த, ஏழை கட்டட தொழிலாளி திரு.நாராயணசாமி அவர்களுக்கு இந்தியாவிலேயே முதன்முறையாக அரசு மருத்துவமனையில் உடல் உறுப்பு தான அறுவை சிகிச்சை மூலமாக இரண்டு கைகளும் புதிதாக பொருத்தப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திரு. நாராயணசாமி அவர்களுக்கு திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் வார்டு மேலாளர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணையினை வழங்கினார்கள்.

மேலும், இந்தியாவிலேயே முதன்முறையாக அரசு மருத்துவமனையில் உடல் உறுப்பு தான அறுவை சிகிச்சை மூலமாக இரண்டு கைகளை இழந்த திரு.நாராயணசாமி என்பவருக்கு இரண்டு கைகளை பொருத்தி சாதனை புரிந்த, டாக்டர் ரமாதேவி தலைமையிலான ஸ்டான்லி அரசு மருத்துவமனையின் மருத்துவக் குழுவினருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று பாராட்டுகளை தெரிவித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை கூடுதல் செயலாளர் திரு.எஸ். நாகராஜன், இ.ஆ.ப., இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., மாநில நலவாழ்வு குழும இயக்குநர் டாக்டர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவர் திரு.வே. ராஜாராமன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**